# சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

**(இனம் -- 6)**

01. தமிழ்நாடு **22,699** சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக் காடுகளைக் கொண்டுள்ளது. இது மாநிலத்தின் பூகோள அடிப்படையிலான மொத்தப் பரப்பளவில் **17.45** விழுக்காடாகும். தமிழக அரசு, தேசீய வனக் கொள்கையின் இலக்கான மொத்தப் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கைக் காடுகளாகக் கொண்டிருக்க தீவிர முயற்சி செய்து வருகின்றது. இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு மாநில, மத்திய மற்றும் அயல் முகமை நிதி உதவியுடன் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அண்மைக் காலத்தில் சமூகக் காடுகள், வேளாண்மைக் காடுகள், பண்ணைக்காடுகள் மற்றும் சமுதாயக் காடுகள் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. இத்திட்டங்களை வனத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறைகள் செயல்படுத்தி வருகின்றன.

சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள்

02. தமிழ்நாடு வனத்துறை சமூகக்காடுகள் மேம்பாட்டில் முன்னோடியாகத் திகழ்கிறது. சுமார் **1.3** இலட்சம் ஹெக்டேர் சமுதாய நிலங்களில் மரங்களை வளர்த்துள்ளது. **1981–82** ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் சமூகக்காடுகளாக இதன் நிலையை உயர்த்தப்பட்டது. இத்திட்டம் **1996–**ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை செயல்பட்டு வந்தது. உள்ளூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கிராம சமுதாயங்களை உள்ளடக்கி, மரங்களை உருவாக்கி பாதுகாத்தலும், சமுதாய நிலங்கள், தனியார் நிலங்கள் மற்றும் வீட்டு சுற்றுப்புறங்களில் மரத்தோட்டங்களை வளர்த்தலும் இதன் முக்கிய கொள்கையாகும், மற்ற துறைகளாகிய வேளாண்மை, ஊரக வளர்ச்சி, வருவாய், நெடுஞ்சாலை மற்றும் பாசனம் ஆகியவை ஈடுபாட்டுடன் பங்கேற்பதற்கான ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையானது இச்செயல்முறை ஏற்பாட்டின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த தேவைப்படுகிறது. ஊரக வளர்ச்சித்துறை மரம் பட்டாதிட்டத்தைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. வேளாண்துறை வறண்ட நிலங்களில் வேளாண்காடுகளை அமைத்து மேம்படுத்துவதில் பொறுப்பு வகிக்கிறது. வனத்துறையிடம் சமுதாயக்காடுகளில் மரங்களை வளர்த்தல், மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல், ஆராய்ச்சி. பயிற்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற திட்டம், தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **1991–92** ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுதவிடன் இயங்கி வருகிறது.

03. சமூக மற்றும் பண்ணைக் காடுகள் பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. **(1)** கூழ்மரங்கள் சார்ந்த தொழில்களான காகிதம், ரேயான் போன்றவற்றிக்கு மூலப்பொருட்களை அளிப்பதற்கு விரைவாக வளரும் மரக்கன்றுகளை உடைய தோட்டங்களை வளர்த்தல் **(2)** வனப்பகுதிக்கு அருகாமையில் உள்ள மாநகரங்கள் நகரங்கள் மற்றும் நீர்பிடிப்பு உள்ள தரிசு நிலங்களில் உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எரிபொருள் தரக்கூடிய மரத்தோட்டங்களை அமைத்தல். **(3)** தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி மாவட்டங்களில் கடற்கரை நெடுக உள்ள காடுகளில் மரத்தடுப்பு வேலித் தோட்டங்களை அமைத்தல். **(4)** தரம் குன்றிய வளமில்லாத வனப்பகுதிகளில் வனச்சூழலை ஏற்படுத்தவும், குறுகிய மரங்களடர்ந்த காடுகளில் தீவனம் மற்றும் பிற பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும் காடு வளர்ப்பு பணியை மேற்கொள்ளல்.

04. மேலும், சமூக மற்றும் பண்ணைக் காடுகளின் நடவடிக்கைகளும் பலவிதத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது, **(1)** இடைபடு காடு திட்டம் **(2)** தேசிய தரிசுநில மேம்பாட்டு திட்டம் **(3)** மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் **(4)** மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் **(5)** ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் **(6)** ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், சமூக மற்றும் பண்ணைக்காடுகள் பகுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்கள் மாநிலத்தில் வனத்துறையால் செயற்படுத்தப்பட்டன. அவைகளாவன: காகிதக்கூழ் மரத்தோட்டம், விறகு மரமும் மென் மரமும், தடுப்பு சுவரை அமைக்க மரங்களை வளர்த்தல். மூங்கில் தோட்டங்களை அமைத்தல் முதலியன. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சமூகக் காடுகளின் கீழ் **77,838** ஹெக்டேர் பரப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக **245** கி.மீ நிழல் தரும் மரக்காடுகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுத் திட்டப்பணிகள், வெளிநாட்டு முகமையான சுவீடன் பன்னாட்டு

மேம்பாட்டு நிறுவனம், உலக வங்கி, வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் ஆகியவற்றிலிருந்து சமூக காடுகள் துறைக்கு நிதியுதவி வருகின்றது. மேற்கூறிய திட்டங்களை எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வனத்துறையால் செயல்படுத்தியதற்கான மொத்தச் செலவு ரூ.16,832 இலட்சம் ஆகும்.

05. தமிழ்நாட்டிலுள்ள காடுகளைப் பாதுகாக்கவும், நிருவகிக்கவும் கீழ்காணும் சட்டங்களும் விதிகளும் நடைமுறையிலுள்ளன. (1) 1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டம், (2) 1949–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், (3) 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு ) சட்டம், (4) 1972–ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், (5) 1986–ஆம் ஆண்டு சுற்றுபுறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், (6) 1980–ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டம். மேற்கண்ட முதல் நான்கு சட்டங்கள் மாநில அரசால் இயற்றப்பட்டவை. இறுதியாக உள்ள இரண்டு சட்டங்கள் இந்திய அரசால் இயற்றபட்டவையாகும். 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமானது, பாதுகாக்கப்படாத காடுகள் தொடர்பில் சிற்றூராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சில அதிகாரங்களை அளித்துள்ளது. (பிரிவு 120,121,131 மற்றும் 245).

06. பாதுகாக்கப்படாத காட்டு நிலங்களை மாற்றுதல் மற்றும் திரும்ப கைக்கொள்ளுதல் தொடர்பில் ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றித்திற்கும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் (பிரிவு 120,121) அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொதுச்சாலைகளில் யாரும் மரம் நடவோ அல்லது சொந்தமாக்கிக் கொள்ளவோ பிரிவு 131 (உ) மற்றும் (ஊ) இன் கீழ் கூடாது. பொதுச்சாலை அல்லது புறம்போக்கு நிலத்தில் உள்ள மரங்களை வெட்டவோ, அழிக்கவோ மரப்பட்டைகளை உரிக்கவோ, இலைகள், பழங்களை எடுக்கவோ ஊராட்சி ஒழுங்குபடுத்தியுள்ளது.

## அதிகாரங்கள் ஒப்படைப்பு

07. இப்பொருளானது, எரிபொருள் மற்றும் தீவனம் (இனம்–12) மற்றும் சிறிய காடுகள் உற்பத்திப் பொருட்கள் (இனம்–7) ஆகியவற்றில் உள்ள பொருட்களுடன் நேரடியாக இணைந்துள்ளது. இப்பொருளில் உள்ள பல பரிந்துரைகள், இங்கும் பொருந்தும், எனவே உள்ளாட்சித்துறைகளுக்கு ஒப்படைக்கத் தேவையான கூடுதல் அதிகாரகங்களைப் பின்வரும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளிடமுள்ள நிலங்களில் தோட்டங்களை அமைத்து அதைச் ஊராட்சிகள் சொந்தமாக்கிக் கொள்ளலாம். ஊராட்சியானது அரசு திட்டங்களில் கீழ் பயனாளிகளை அறிந்து தெரிவு செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியச் செயலாக்கத்திற்காக நிதிகளை ஊராட்சிக்கு வழிமுறைப்படுத்தி ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இது குறித்து மாவட்ட ஊராட்சிகள், திட்டமிடலையும் ஆலோசனை கூறும் பங்கையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## I. ஊராட்சி

| நடவடிக்கை (1) | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|
| 1. சமூகக்காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல் | 1. உயிரின வாழ்க்கையும், சுற்றுப்புறச்சூழலையும், மேம்படுத்து வதற்காக சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளைப் பற்றி மேம்படுத்துதலும் பரவச்செய்தலும். |
| | 2. சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகளுக்காகச் சமுதாய தரங்குறைந்த தரிசு நிலங்களை கண்டறிந்து சமுதாயப் பண்ணைகளையும் சமூக வனத்திட்டங்களையும் செயற்படுத்துதல். |

| (1) | (2) |
|---|---|
| | 3. பங்கிடல் அடிப்படையில் சமூகக் காடுகளை ஏற்படுத்த ஆர்வமுள்ள,தனியாருக்கு/குழுவினருக்கு ஊராட்சி நிலங்களை குத்தகைக்கு விடுதல். |
| | 4. உள்ளூரின் பயனுக்கு எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரக்கட்டை உற்பத்தி செய்யும் செடிகளை மேம்படுத்துதல். |
| | 5. பண்ணைக் காடுகளின் கீழ் நாற்றங்கால்களையும் மலைத்தோட்ட நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தனியார் விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு உதவி செய்தல். நாற்றுகளையும்,மரக்கன்றுகளையும் வழங்குதல். |
| | 6. எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரக்கட்டை சேகரித்தல், வழங்குதல் மற்றும் விற்பனை செய்தல். |

## II. ஊராட்சிஒன்றியம்

| நடவடிக்கை<br>(1) | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|
| சமூகக்காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல் | 1. உயிரின வாழ்க்கையும், சுற்றுப்புறச்சூழலையும், மேம்படுத்து படுத்துவதற்காக சமூக பண்ணைக்காடுகளைப் பற்றி மேம்படுத்துதலும், பரவச் செய்தலும். |
| | 2. தரம் குன்றிய தரிசு நிலங்களைக் கண்டறிதல், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திடமுள்ள பொது உரிமை நிலங்களில் நேரிடையாகவோ அல்லது ஊராட்சிகள் மூலமாகவோ செயற்படுத்துவதற்காகச் சமூகக்காடுகள் திட்டங்களை உருவாக்கல். |
| | 3. ஊராட்சி ஒன்றியத்தின் சமூகக்காடுகள் திட்டங்களையும், அரசாலும், மாவட்ட ஊராட்சியாலும் வழங்கப்பட்ட பணிகளை செய்தல். மேலும் சாலைகள், ரயில் பாதைகள், மற்றும் பொது இடங்களில் மரங்களை நடுதல். |
| | 4. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்களுக்கு தேவையான நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் உற்பத்தி செய்து வழங்கல். |
| | 5. எரிபொருள், தீவனம் மற்றும் வீடுகட்ட பயன்படுத்தும் மரம் ஆகியவற்றைப் பற்றிக் கிராம மக்களிடையே பரப்புதல். |
| | 6. ஊராட்சிகளுக்கும், பொதுமக்களுக்கும் நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் வழங்குவதற்காக நாற்றங்கால்களை அமைத்தல். |
| | 7. எரிபொருள், தீவனம் மற்றும் வீடுகட்ட பயன்படும் மரங்களை சேகரிக்கவும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல். |
| | 8. வனம், வேளாண்மை, வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சித்துறைகளால் செயல்படுத்தி வரும் சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தல். வனக்காப்பாளர்கள், வட்டாசியர், வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோர் இந்த ஆய்வில் கலந்து கொள்ள வேண்டும். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை<br>(1) | | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|---|
| சமூகக்காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல் | 1. | சமூக மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டில் மாவட்டத்தின் செயல்திறத்தை மதிப்பிடல். ஊராட்சிகள் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், மற்றும் துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாக செயல்படுத்துவதற்குத் திட்டங்களையும், செயல்முறை ஏற்பாடுகளையும் தயாரித்தல். |
| | 2. | நிதிகளுக்கு ஏற்பளித்து ஒப்பளிப்பு செய்ததற்கேற்ப, ஊராட்சிகளால் தீர்மானிக்கப்பட்ட சமூகக்காடுகள் திட்டங்களையும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஊராட்சிக்கும் ஒதுக்கிய திட்டங்களையும் தொகுத்தல். |
| | 3. | அனைத்து சமூக மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்கள் அனைத்தையும் வேளாண்மை நிலைக் குழுவின் மூலமாக காலமுறையாக (மூன்று மாதத்திற்கொரு முறை) ஆய்வு செய்தல். |
| | 4. | மாவட்டத்தின் சமூக மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டின் இடர்பாடுகளையும் வாய்ப்பு வளங்களையும் பற்றி அரசுக்கு அறிவுரை கூறல். |

### நிருவாகச் சிக்கல்கள்

08. சமுதாயப் பொதுஉரிமை நிலங்களில் வளர்க்கப்பட்டு வரும் தோட்டங்களை ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாகப் பேணப் பெற வேண்டும். தங்களின் ஆட்சிக்குட்பட்ட நிலங்களில் மேலே குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் விளைவாக பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கட்டுபாட்டிற்கு மாற்றப் பெற வேண்டிய பணியாளரின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. வனக்காவலர்கள், சரக அலுவலர்கள் மற்றும் கோட்ட வன அலுவலர்கள் அரசுப் பணியாளர்களாக இருப்பதால் அவர்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அயல்பணியில் அனுப்பலாம். சமூக காடுகளின் வேலையாட்களையும் காவலர்களையும் ஊராட்சிக்கு மாற்றப் பெறலாம். அவர்களின் கூலியைக் காலமுறைப்படி அரசிடமிருந்து மீளப் பெற வேண்டும்.

| நிலை | செய்கடமை | பணியாளர் | குறிப்புரை |
|---|---|---|---|
| அ) ஊராட்சி | ஊராட்சியிடம் உள்ள நிலங்களிலும் பொது உரிமை நிலக் குன்றுகளிலும் நடை முறையிலுள்ள தோட்டங் காத்தலும் பேணலும் | கிராம சமூகக் காடுகளின் வேலையாட்கள்/ வனக் காவலர்கள்/(4022 பேர்) | 31.3.1996 வரை நிதி ஒதுக்கீட்டை வெளிநாட்டு நிதி உதவித் திட்டத்தின் மூலம் பெற்றுவந்தது. கிராம உள்ளாட்சி அமைப்பு மாற்று நிதி ஆதாரங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஆ) ஊராட்சி ஒன்றியம் | தோட்டங்களை வளர்த்தல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் | வனக்காப்பாளர்கள்: 338<br>வனக் காவலர்கள் : 67 |
| இ) மாவட்ட ஊராட்சி | சமூக பண்ணைக் காடுகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் | வனத்துறை துணைத் தலைவர்கள்<br>நிலையான கோட்ட வன அலுவலர் : 13 |

## நிதிச் சிக்கல்கள்

09. நீர்பிடிப்புக் பகுதியிலுள்ள மரங்களை அறுப்பதின் மூலம் கிடைக்கும் வருவாயை 50:50 என்ற விகித அளவில் ஊராட்சிகளுடன் வனத்துறை பங்கிட்டுக் கொண்டது. இது 60:40 என்ற விகித அடிப்படையில் மாறியுள்ளது. அம் மரங்களின் இயக்கமும் பராமரிப்பும் ஊராட்சிகளிடம் இருப்பது முதல், 100 விழுக்காட்டு வருவாய் தொடர்புடைய ஊராட்சி அமைப்புகளுக்கே செல்லும். மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அரசு குறிப்பிட்ட ஒதுக்கீட்டைச் செய்யலாம். பின்வரும் திட்டங்களின் செயலாக்கத்தை ஊராட்சி ஒன்றிங்களுக்கு மாற்றம் செய்யலாம்.

| வ.எண் | திட்டம் | முதலீடு (1996-97) ரூபாய் இலட்சங்களில் |
|---|---|---|
| 1. | விறகு மரக்காடுகள் | 236.51 |
| 2. | கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான திட்டங்கள் | 24.50 |
| 3. | சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 716.59 |
| 4. | ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 50.00 |
| | மொத்தம் | 1027.60 |